# அண்ணா சாலையில் சீரமைக்கப்பட்ட சுரங்கப்பாதை திறப்பு

■ சென்னை

சென்னை அண்ணசாலை, சிம்சன் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள சுரங்கப்பாதை, மெட்ரோ ரயில் பணியால் மூடப்பட்டிருந்தது. மெட்ரோ பணிகள் முடிவடைந்த நிலையில், இச்சுரங்கப்பாதையை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சீரமைத்தது.

சுரங்கப்பாதை சுவர்களில் டைல்ஸ் பதிக்கப்பட்டதுடன், தரையில் மார்பிள்கள் பதிக்கப்பட்டன. அத்துடன், போதிய அளவு மின்விளக்கு வசதிகளும் செய்யப்பட்டன.

இப்பணிநிறைவடைந்துள்ளநிலையில், பொதுமக்களின் பயன்பாட்டுக்காக நேற்று முதல் இச்சுரங்கப்பாதை திறந்து விடப்பட்டுள்ளது. மேலும், இச்சுரங்கப்பாதை சென்னை அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.